**முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**OS No**. 30/2020

**நாள் :** 07.03.2025

பெயர் : விஸ்வநாதன்

**PW**1: **பிரதிவாதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் தொடர்ச்சியாக குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

கிரைய ஒப்பந்தத்தில் கண்டுள்ள சொத்து பாகம் பிரியாத சொத்து என்றால் சரிதான். பிரதிவாதிக்கு சொத்தில் பொதுவில் ¼ பாகம் உள்ளது என்றால் சரிதான். பாகம் பிரியாத சொத்து என்பதால் சுவாதீனம் எடுக்க முடியாது என்றால் சரியல்ல. நான் சுவாதீனம் எடுத்ததாக சொல்லும் சொத்தின் நான்கு மால்களில் என்னால் சொல்ல முடியுமா என்றால் தற்போது சொல்ல இயலாது. ரூபாய் 15 லட்சம் என்பது என்னை பொறுத்தவரை பெரிய தொகை என்றால் சரிதான். நான் வருமானவரி செலுத்துபவர் இல்லை. வா.சா.ஆ.1 எழுதப்பட்ட காலகட்டத்தில் எனக்கு ரூபாய் 15 லட்சம் கொடுப்பதற்கு வசதி இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த வங்கியில் இருந்து அந்த தொகையை எடுத்தேன் என்றால் பெடரல் வங்கி, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் யாழி சிட்பண்ட் ஆகியவற்றில் இருந்து இந்த தொகையைப் பெற்றேன். ஒவ்வொரு வங்கியிலிருந்தும் எவ்வளவு தொகை எடுத்தேன் என்றால் தற்போது சொல்ல இயலாது; கையிலிருந்து கொடுத்தேன். ஈரோடு அகில்மேடு வீதியில் பைனான்ஸ் வைத்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஒப்பந்தப் பத்திரத்தில் 2 வருட காலகெடு நிர்ணயிக்கப்பட்ட பிறகு மறுபடியும் வா.சா.ஆ.2 ன்படி மேலும் இரண்டு ஆண்டுகள் நீடித்துகொள்வதற்கு என்ன காரணம் என்றால் பிரதிவாதியும் அவர் கணவரும் சொத்தை பாகம் செய்வதில் காலதாமம் ஏற்படுவதாக சொல்லி மேலும் இரண்டு ஆண்டுகள் நீடித்துகொண்டார்கள். வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள வாசகங்கள் சரிதான். பிரதிவாதியும் அவர் கணவரும் கேட்டுக்கொண்டதன் பேரில் மேலும் இரண்டு வருட கால அவகாசம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் கிரையம் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்றாலும், பிரதிவாதியிடம் கொடுத்த கடனுக்காக வற்புறுத்தி பெறப்பட்ட ஆவணங்கள் என்றாலும் சரியல்ல. ரூ 5 லட்சம் கடன் கொடுத்துவிட்டு நிதி நிறுவன வழக்கப்படி 3 மடங்கு தொகை காட்டி ரூ 15 லட்சத்திற்கு வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டன என்றால் சரியல்ல. சொத்தின் சுவாதீனம் என்வசம் இல்லை என்றால் சரியல்ல. ரூ 15 லட்சம் கொடுப்பதற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7, 8, 9 ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்புடையவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10, 11 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. ரூ 5 லட்சம் கடன் கொடுத்துவிட்டு வா.சா.ஆ.1 மற்றும் 2 அடிப்படையில் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.